**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அம்பாசமுத்திரம்**

**முன்னிலை:- திரு.பெ.குமார், பி.ஏ.,பி.எல்.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

அம்பாசமுத்திரம்.

2023-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 10-ம் நாள் திங்கள் கிழமை

**அசல் வழக்கு எண்.98/2021**

in

**CNR.NO.TNTL0D-000172-2021**

பாலகிருஷ்ணன் ... வாதி

/எதிர்/

1) காயத்ரி நாராயணன்

2) மகராஜன்

(2 ம் பிரதிவாதி தனக்காகவும்,

1 ம் பிரதிவாதியின் பவர் ஏஜெண்ட் நிலைமையிலும்) ... பிரதிவாதிகள்

இந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் என் முன்பு விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.இராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.ஆர்.இராமசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், கடந்த 10.04.2023 ம் தேதியில் விசாரணைக்காக பட்டியலில் போடப்பட்டு, உபயதரப்பினர்கள் ஆஜராகியுள்ள நிலையில் வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி வாதி வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை என எடுத்துரைத்து பிராதில் மேலெழுத்து செய்ததன் அடிப்படையில் இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

இந்த வழக்கானது பிராது 1ம் தபசில் சொத்தை வாதி அமைதியாக அனுபவம் செய்து வருவதை மேற்படி சொத்தின் வடக்கு எல்கையில் கிழமேலாக அமைக்கப்பட்டுள்ள கம்பி வேலியை பிரதிவாதிகளோ, அவரின் வகையாட்களோ, ஏஜெண்டுகளோ வேலியை அப்புறப்படுத்தியோ, 1ம் தபசில் சொத்தை ஆக்கிரமித்தோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர நிலை உறுத்துக்கட்டளை டிக்கிரி பிறப்பிக்கும்படிக்கும்,

பிராது 2ம் தபசில் பொது நடைபாதையை பயன்படுத்தி வடபக்கம் உள்ள மெயின் ரோட்டிலிருந்து தெற்கே 1ம் தபசில் சொத்திற்கு வாதி நடந்து புழங்கி வருவதை பிரதிவாதியோ, அவரின் வகையாட்களோ, ஏஜெண்டுகளோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர நிலை உறுத்துக்கட்டளை டிக்கிரி பிறப்பிக்கும்படிக்கும் மற்றும் வழக்கு செலவுத்தொகை பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும்படிக்கும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் 10.04.2023-ம் தேதியில், விசாரணைக்காக பட்டியலில் போடப்பட்டு, உபயதரப்பினர்கள் ஆஜராகியுள்ள நிலையில் வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி வாதி வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை என எடுத்துரைத்து பிராதில் மேலெழுத்து செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கு மேல்நடத்தவில்லை என்பதாக தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை 2023ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/-திரு.பெ.குமார், 10.04.2023
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :- இல்லை
பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :- இல்லை.

ஒப்பம்/-திரு.பெ.குமார், 10.04.2023
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

கூ.மா.உ.நீ.ம., அம்பாசமுத்திரம்.
அ.வ.எண்.98/2021
நேரிய/வரைவு தீர்ப்புரை
நாள்: 10.04.2023